14th December 1961]

Iron for public sector (purchase)

* **2305. Q.—Sri V. K. KOTHANDARAMAN :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1960 வரை சர்க்கார் நடத்தும் தொழிற் சாலைகளின் கட்டிட வேலைகளுக்கு வெளி மார்க்கெட்டுகளில் **(open market)** எவ்வளவு இரும்பு வாங்கப்பட்டது ?

(இ) என்ன விலைக்கு வாங்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) 1,305.5 metric tonnes.

(இ) Rs. 11,15,537.

Sri V. K. KOTHANDARAMAN : ஓபன் மார்க்கெட்டில் அதிக் விலை கொடுத்து வாங்கக்கூடிய காரணத்தினால் சர்க்காருக் குப் பெரிய அளவில் நஷ்டம் ஏற்படுகிறது அல்லவா ? ஆகவே கண்ட்ரோல் விலைக்கு எவ்வளவு தேவைபடுகிறதோ அந்த அளவுக்கு இரும்பு வாங்க முயற்சிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்கிறபடி நடந்துகொள்ளத்தான் சர்க்காரும் முயற்சி செய்கி றது. கூடுமான அளவுக்கு நமக்கு தேவையான இரும்பு, எஃகுப் பொருள்களைக் கோட்டா மூலம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று பல முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் வெகுவேகமாக முன்னேற்றம் அடைந்துவருகிற நமது என்ஜினி யரிங் தொழில்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் விலை கொஞ்சம் கூடுதலாகப் போனாலும் ஓபன் மார்க்கெட்டில் விலை கொடுத்து வாங்குகிறோம். ஆனால் கூடுமான அளவுக்கு அதை அலாட்மெண்டு மூலமாகப் பெறுவதற்கே முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

Waram cultivators (loan)

* **2309. Q.—Sri V. K. KOTHANDARAMAN :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வார குத்தகை சாகுபடியாளர்களுக்கு சொந்த நில சாகுபடி செய்யும் பயிர்களின்மீது கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் கொடுப்பதுபோல் கொடுக்கப்படுகிறதா ?

(இ) இல்லையேல், காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN : இதற்கு முன்னதாக ஒரு கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இதுபோன்று வாரச்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குக்கூட கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லை யென்றால் இனிமேலாவது செய்வதற்கு உத்தேசம் உண்டா ?